DINAKARAN

PAGE NO: 15 DATE: 30.09.2023



# புதுவை பல்கலைக்கழகத்தில் சர்வதேச கருத்தரங்கு

## கவர்னர் தமிழிசை பங்கேற்பு



▶ புதுவை பல்கலைக்கழகத்தில் நடந்த சர்வதேச கருத்தரங்கில் கவர்னர் தமிழிசை கலந்து கொண்டு ஓவியத்தை திறந்து வைத்தார்.

**புதுச்சேரி, செப். 30:** புதுவை பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை, சமூக அறிவியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் பள்ளி ஆகியவை இணைந்து பல்கலைக்கழக கலாச்சார மாநாட்டு மையத்தில் தாந்த்ரீக மதம், தத்துவம், இலக்கியம், வழிபாடு, கலை, வரலாறு மற்றும் தொடர்ச்சிகள் என்ற தலைப்பில் 5 நாட்கள் சர்வதேச கருத்தரங்கு நடந்தது. இதில் கலை மையம், பிராந்திய மையம், இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் இந்தியா முழுவதிலுமிருந்து 60க்கும் மேற்பட்ட அறிஞர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளராக கவர்னர் தமிழிசை கலந்து கொண்டு தாந்த்ரீக மதம், தத்துவம், வழிபாட்டு முறைகள், கலை, இலக்கியம், வரலாறு மற்றும் தொடர்ச்சிகள் குறித்து உரையாற்றினார். பிறகு தீபகற்ப இந்தியாவில் கடல்சார் வர்த்தகம் என்ற புத்தகத்தை வெளியிட்டார். புதுச்சேரியின் ஐ.ஜி. என்.சி.ஏ. மண்டல இயக்குநர் டாக்டர்.கோபால் தீட்டிய ஓவியத்தை வெளியிட்டார். இதனை தொடர்ந்து கருத்தரங்கில் இலக்கியம், தத்துவம், சடங்குகள், தந்திர யோகா மற்றும் அரவிந்தர் யோகா பற்றிய சிறப்பு கல்வி குறித்து விளக்கப்பட்டது. அரவிந்தர் ஆசிரமம் தாந்த்ரீக கலை குறித்த கலை கண்காட்சியை நடத்தியது. கல்வி கலந்தாய்வை தொடர்ந்து பெரிணி சிவதாண்டவம் (தெலங்கானா), பரதநாட்டியம் (புதுச்சேரி), தெய்யம் நடனம் (கேரளா) போன்ற கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

DINAKARAN

DATE: 30.09.2023

PAGE NO: 05

# PONDICHERRY UNIVERSITY

A Central University

DR.B.R.AMBEDKAR ADMINISTRATIVE BUILDING

R.V. NAGAR, KALAPET, PUDUCHERRY–605014

RECRUITMENT CELL

Advt.No: PU/RC/NT/2023/46 Dated: 27.09.2023

## RECRUITMENT OF REVISED ADMINISTRATIVE POSITIONS

Online Applications are invited from the eligible candidates for the various revised Administrative positions (Regular/ Tenure basis).

For details of the posts, minimum eligibility criteria, experience, general instructions, terms & conditions etc., visit the University website: **recruitment.pondiuni.edu.in.**

REGISTRAR (i/c)